★ செய்தியாளர் மாநாட்டில் சிறில் ரணதுங்கா

# புலிகள் முற்றுகையைக் கைவிட்டால்தான் விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படுமாம்

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 233 பிரசோற்பத்தி ஆடி 03 ( 19 - 07 - 1991 ) வெள்ளி

ஆனையிறவை மீட்கும் முகமாக வடமராட்சி கிழக்கில் தரையிறக்கப்பட்ட படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் இதுவரை 64 சிப்பாய்கள் பலியானதாகவும் 200 படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில்ரணதுங்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார். காயமடைந்த சிப்பாய்களின் இத்தொகை கரையிறக்கப்பட்ட படையினரில் எட்டில் ஒருபகுதி என பி. பி. ஸி. நேற்று சுட்டிக்காட்டியது. இதேவேளை 'ஒப்பரேஷன் பலவேகய' (பலமான வேகம்) எனும் இந் நடவடிக்கை தனியே ஆனையிறவை மீட்பதற்கு மட்டுமல்ல விடுதலைப்புலிகளுடன் மறுமுனையில் போராடவே தொடுக்கப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டாராம். விடுதலைப்புலிகள் ஆனையிறவு முகாமின்முற்றுகையைக்கைவிட்டாலேவிமானப்படைத் தாக்குதல் நிறுத்தப்படும் —04 ஆம் பக்கம் பார்க்க

# ஆனையிறவு பகுதியில் மீண்டும் வெடித்த மோதல்

## சிலயார் தூரத்தில் நிலை எடுத்து முகாமைநோக்கி புலிகள் தாக்கு

சில நாள் இடைவெளியின் பின்னர் நேற்றுத் திடீரென ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் கடும் மோதல் இடம்பெற்றது.

நேற்றுப் பகல் பிரதான முகாமினுள் சிக்கியிருந்த படையினர் விடுதலைப் புலிகள் தங்கியிருந்த அரண்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதேவேளை இரு குண்டு வீச்சு விமானங்களும் ஹெலி ஒன்றும் முகாமைச் சூழ உயரப் பறந்து கொண்டிருந்தன. படையினரை நோக்கி விடுதலைப் புலிகளும் பதில் தாக்குதலை ஆரம்பித்தனர். மோதல்கள் சுமார் இரு மணி நேரம் நடைபெற்றன.

விடுதலைப் புலிகள் சிலயார் தூரத்தில் நிலை எடுத்து தாக்குதலை அதிகரிக்கவே முகாமில் இருந்து நடாத்தப்பட்ட தாக்குதல் நிறுத்தப்பட்டது.

இச்செய்தி அச்சுக்கு போகும் வரை மீண்டும் எவ் —04ஆம் பக்சும் பார்க்க

## சாவகச்சேரியிலும் குண்டுத்தாக்குதல்

சாவகச்சேரிப்பகுதியிலும் நேற்றைய தினம் குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (50)

## மற்றுமொருவர் கைது

ராஜிவ் காந்தி கொலை தொடர்பாக சண்முகம் என்று அழைக்கப்படும் ஜெயராயன் என்பவர் நேற்றுக் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வேதாரணியத்தில் இவர் படகுகளைச் சொந்தமாகக் கொண்டவர் எனக் கூறப்படுகிறது.

## சென்னையில் குண்டு வெடிப்பு
### குப்பையைக் கிழறிய பெண் படுகாயம்

நேற்றுக்காலை சென்னை கீழ்ப்பாக்கம் பகுதியில் குண்டு ஒன்று வெடித்துள்ளது. கீழ்ப்பாக்கம் சட்டக்கல்லூரியின் வளாகத்தினுள் இருந்த குப்பைத் தொட்டி ஒன்றினுள் இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது. காகிதங்களை பொறுக்கித்திரியும் பெண் ஒருத்தி இக்குப்பைத் தொட்டியினுள் கிழறிய போதே குண்டுவெடித்தது. குண்டினுள் இருந்து பல இரும்புத்தூள்கள் நாலாபுறமும் சிதறியதாம் இதனால் அப்பெண் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் —04 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கிழக்கில் பரவலாகத் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதல் நடவடிக்கை காரணமாக வடமராட்சி கிழக்குப்பகுதி அனைத்தும் தற்போது தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி கிழக்கில் உள்ள வல்லிபுரக்கோவில், குடத்தனை, மணற்காடு, நாகர்கோவில், குடாரப்பு, மருதங்கேணி, தாளையடி, உடுத்துறை, ஆழியவளை. வெற்றிலைக்கேணி கட்டைக்காடு, சுண்டிக்குளம் ஆகிய அனைத்துக் கிராமங்களிலேயும் பரவலாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை பீரங்கித் தாக்குதல் பல கட்டிடங்கள் தீக்கிரை

வெற்றிலைக்கேணிக்கு அண்மையில் உள்ள கிராமங்களில் கடற்படைக்கப்பல்கள் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. அத்துடன் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை ஏற்படுத்தி வருகின்றன.

இத்தாக்குதல்கள் உடுத்துறை, ஆழியவளை ஆகிய கிராமங்களிலேயே பெருமளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள கட்டிடங்கள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. பல கட்டிடங்கள் இன்னமும் எரிந்து கொண்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. (43 50)

## தாளையடி விமானத் தாக்கு

தாளையடியில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற அவ்ரோ விமானக் குண்டு வீச்சினால் தபாலகம் உட்பட பல வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

—04ஆம் பக்கம் பார்க்க

## நேரசூசிகைக்கு ஏற்ப பாடசாலைகள் நடைபெறும்

இன்று முதல் மீள ஆரம்பமாகின்ற பாடசாலைகள் யாவும் மாணவர்களின் பாதுகாப்பை அதிபர்கள் உறுதிப் படுத்துவதுடன் பாடசாலை நேரசூசிக்கேற்ப பாடசாலைகளை நடாத்த வேண்டுமென பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் முடிவுற் —04 ஆம் பக்கம் பார்க்க

## குடத்தனையில் குண்டுவீச்சு

குடத்தனையில் தோட்டத்தில் வெண்காயச் செய்கையில் ஈடுபட்டவர்கள் மீது பொம்மர் குண்டுத் தாக்குதல்களை நடாத்தியதில் ஒருவர் படுகாயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் —04ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

நேற்று முன்தினம் வடமராட்சிப்பகுதியில்நடைபெற்ற வெடிவிபத்தில் ஜெயராஜ் (வி. அமல்ராஜ் பலாலி)தைரியம் (ந. ஆனந்தராசா பொலிகண்டி) ஆகியோர் வீரமரணமடைந்தனர். மணலாறில் நேற்று நடைபெற்ற வெடிவிபத்தில் கோபு (வெ. வசந்தன் பருத்தித்துறை)வீரமரணமடைந்தார். (50)

# வெற்றிலைக்கேணி மோதல்
## 19 படையினர் பலி; இரு பவள் சேதம்

நேற்று ஐந்தாவது நாளாகவும் கட்டைக்காடு. வெற்றிலைக்கேணி படையினர் முன்னேற முற்பட்ட போது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

நேற்று நண்பகல் மூண்ட யுத்தத்தில் புலிகளின் தாக்குதலில் அங்குநின்ற இரு பவள் கவசவாகனங்கள் சேதமடைந்தன. படையினர் தரப்பிலும் சேதம் ஏற்பட்டுள்ளது,

இதேவேளை நேற்றுமட்டும் 19 படையினர் பலியானதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. மோதலில் புலிகள் தரப்பிலும் சிலர் வீரமரணம் அடைந்தனர்.

இதனிடையே வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதியில் தரையிறங்கிய படையினர் தொடர்ந்தும் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா —04ஆம் பக்கம் பார்க்க

# செய்தி உலகம்

## ஈராக்கிடம் 25 கிலோ யூரேனியம்

சுமார் 25 கிலோ கிராம் செறிவூட்டப்பட்ட யூரேனியத்தை ஈராக் மறைத்து வைத்திருப்பதாக சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த செறிவூட்டப்பட்ட யூரேனியத்தில் 90 சத வீதம் அணுகுண்டுத் தயாரிப்புத் திறன் கொண்டதெனவும் அணுசக்தி ஏஜென்ஸி தெரிவித்துள்ளது: தன்னிடம் 500 கிராம் செறிவூட்டப்பட்ட யூரேனியம் மட்டுமே உள்ளதாக ஈராக் பிரகடனப் படுத்தியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## எயிட்ஸைக் கட்டுப்படுத்த நிதி

இந்தியாவில் எயிட்ஸ்நோயைக் கட்டுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் 13 லட்சம் டாலர்களை வழங்கியுள்ளது.

இதில் தமிழ் நாட்டுக்கு 2 லட்சத்து 87 ஆயிரம் டாலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

## தொடரும் குண்டு வெடிப்பு

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் கடந்த திங்கள் இரவு ரயில் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 7 பேர் கொல்லப்பட்டனர், 40க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

கடந்த 25 தினங்களில் பாக்—பஞ்சாப்பில் இடம்பெற்ற மூன்றாவது குண்டு வெடிப்பு இதுவாகும்

## ஒன்றரைக் கோடி பேர் பாதிப்பு

பங்களாதேஷின் வடகிழக்குப் பகுதியில் பெருகி வரும் நதிநீர் வெள்ளத்தினால் ஒன்றரைக் கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பெருமளவு பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## ஓடுபாதையில் எரிமலை சாம்பல்

மணிலா சர்வதேச விமான நிலையம் காலவரையறையற்று மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

விமான நிலையத்திற்கு 50 மைல் தென்மேற்கே ஏற்பட்ட எரிமலை காரணமாக விமான நிலையத்தைச் சாம்பல் மூடியுள்ளமையே இதற்குக் காரணம் என அறிவிக்கப்படுகின்றது.

# ★ களத்தில் காயமடைந்த போராளி சொல்கிறார்

# மீண்டும் களம்புக விரும்புகின்றேன்!

## ஆனால் அதற்குள் புலிக்கொடி ஏற்றப்பட்டுவிடும்

'நான் விரைந்து குணமடைந்து மீண்டும் போர்க்களத்துக்குப் போகவே துடிக்கிறேன். ஆனாலும் நான் குணமடைவதற்குள் என் சக போராளிகள் முகாமைக முற்றாக கைப்பற்றி அங்கு புலிக்கொடியை ஏற்றி விடுவார்கள் — அந்த நம்பிக்கை எனக்கு முழுமையாக உண்டு'.

இவ்வாறு ஆனையிறவுப் போரில் காயமுற்று யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் விடுதலைப்புலிப் போராளி ஒருவர் நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

'களத்தில் எமது போராளிகள் துணிச்சலுடன் எதிரிகளை வீழ்த்திக்கொண்டேயிருக்கிறார்கள் ... முப்படைகள் கூட்டாகத் தமக்குள்ள அனைத்துச் சக்திகளையும் ஒருங்கே கொண்டு எம்மைத் தாக்க முற்பட்டுள்ள போதிலும் எம்மிடமுள்ள துணிவொன்றே போதும் நாம் எதிரிகளை விரட்டியடிப்பதற்கு' என்று தெரிவித்தார் அவ் இளம் போராளி. (16)

□ □

## முகாமைத்துவ பயிற்சி

2ஆம் தர அதிபர்களுக்கான முகாமைத்துவ நெறிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட 2 ஆம் தர அதிபர்களுக்கு இருபகுதி ரீதியில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதில் முதலாவது பகுதியினருக்கு பயிற்சி 15ஆம் திகதி முதல்நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

இரண்டாவது பகுதியினருக்கான முகாமைத்துவப் பயிற்சியானது 22ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இது வரை முகாமைத்துவப் பயிற்சி பெறாத 2ஆம் தர அதிபர்கள் யாழ் கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்பு கொண்டு பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# முரசொலிக்கு வந்த கடிதம்

## பயிர்நோய்களைக் கட்டுப்படுத்த வேப்பெண்ணெய் நல்ல மருந்து

ஆசிரியர்
முரசொலி,
ஐயா,

குடலைகள், கதிர்கள், வருங்காலத்தில் நெற்பயிர்களை மடிச்சுக்கட்டி, சந்துக்கட்டி நோய்கள்; தாக்கிப் நெற்செய்கைக்குட்பட்ட 445 ஏக்கர் நிலத்தில் பயங்கரமான முறையில் தாக்கி வேகமாகப் பரவி வருவது பற்றி முரசொலி செய்தி வெளியிட்டிருந்தது.

எமது பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலப்பரப்பு அண்மைக்கால நிகழ்வுகளால் வெகுவாகச் சுருங்கி உள்ளது இந்நிலையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள 445 ஏக்கரில் எதிர்பார்த்திருக்கும் அறுவடைக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தகவல் தொடர்பு நிலையம் வெளியிட்டுவரும் 'வளரும் வேளாண்மை' மாத வெளியீடு பின்வருவனவற்றின் பயனை வெகுவாக விதந்துரைத்துள்ளது. வேப்பம் விதை, வேப்பம் எண்ணெய் விவசாயமருந்துகளிலும் பார்க்க சிறந்த வகையில் பயிர் நோய்களுக்கு உதவுவதை முந்தையோர் கண்டறிந்து பயன்படுத்திப் பயன் பெற்றுள்ளனர்.

நாம் ஏன் வேப்பம்விதை, வேப்பெண்ணெய் பாவித்துக் கரியாலை - நாகபடுவான் குளப்பகுதியிலுள்ள நெற்பயிர்களை மடிச்சுக்கட்டி, சந்துக்கட்டி நோய்களின் தாக்கத்திலிருந்து காப்பாற்றி எமக்கு அத்தியாவசியமான நெல்மணியைப் பெற்றுக்கொள்ள வழிசெய்யக்கூடாது?

77, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். க. கனகராசா

# நடக்கும் போர் வெற்றிபெற உங்கள் உதவி தேவை- மூர்த்தி

''புதிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்காகத்தான் நாங்கள் போராடுகின்றோம். அப் புதிய சமுதாயத்தில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் நிலை உருவாகும். எங்களால் எல்லாவற்றையும் செய்துகொள்ள முடியும் என்ற நிலையை உருவாக்குவோம்.''

இவ்வாறு தாவடித் தமிழ்க் கலவன் பாடசாலையில் போர்க்காலக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ''இன்று எமது மண்ணை மீட்பதற்காக உங்கள் பிள்ளைகள் போராடுகின்றார்கள். அவர்களுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும். நீங்கள் போராளிகளோடு ஒன்றிணைந்து செயற்பட்டால்தான் இப்போர் வெற்றி பெறும். இப் போர்க்காலத்தில் பல உதவிகள் தேவைப்படுகின்றன. காயமடைந்த போராளிகளைப் பராமரிப்பது, இரத்த தானம் செய்தல், உலர் உணவு அளித்தல் போன்ற நல்ல காரியங்களை நீங்கள் செய்ய வேண்டும்'' என்றார்

(ப-10)

□ □

## தொழில் நுட்ப மாணவரும் சேவை

ஆனையிறவிலும், கட்டைக்காட்டுப் பகுதியிலும் இடம்பெற்று வரும் மோதல்களில் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் போராளிகளைப் பராமரிக்கும் சேவையில் யாழ் தொழில் நுட்பக் க்ல்லூரி மாணவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணத்தின்கருத்து மாநிலங்கள் அவையில்!

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட செய்தி பரவியதும் யாழ்ப்பாணத்தில் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தமை குறித்து நேற்று முன்தினம் இந்திய மாநிலங்கள் அவையில் பிரஸ்தாபிக்க பட்டது

ராஜீவ், கொலை குறித்து யாழ்ப்பாணத்தில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது என பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைச் சுட்டிக்காட்டி உறுப்பினர் ஒருவர் பேசிய போது சபையின் ஏனைய உறுப்பினர்கள் ''வெட்கம் வெட்கம்'' எனச் சத்தமிட்டனராம்.

## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1990/91

மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தைத் தொடர்ந்து, தற்போது உள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தபால் மூலமும் புதிய மாணவர்களை பதிவுசெய்தல் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத் தருகிறோம். பதிவு செய்யும் இறுதித்திகதி 1.8.91 ஆகும். பதிவு செய்யும் பத்திரம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிலும் பெற்றுக்கொள்ளலாம்.

சுயமுகவரியிட்ட முத்திரையொட்டியகடிதஉறையும் அனுப்பப்பட வேண்டும்.

பதிவாளர்

07087

## சென் ஜோன்ஸ் பழையமாணவர் சங்கக் கூட்டம் ஒத்திவைப்பு

20. 7. 91 சனிக்கிழமை நிகழவிருந்த சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் க. ந. யோ. மொறிஸ் அறிவித்துள்ளார்.

A. 07089

## சிறுவிளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம்விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம்.

07082

கடந்த மாதம் கோலாகலமாக நடந்த முத்தமிழ் விழாவில் ''நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்'' என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெற்றது. அரங்கில் ஒலித்த கவிதை முத்துக்கள் சிலவற்றைக் கோர்த்துத் தருகிறோம்.

கோர்வை - 4

## பிஞ்சுகள் தாங்கும் பெரியசுமை

மண்ணில் விதைச்சமணி மண்ணாகிப் போவதில்லை
எண்ணில் பலநூறாய் இன்னும் விளைஞ்சுவரும்
மண்ணை இது வரைநாள் மாடாய் உழுதுழுது;
பண்படுத்தி நன்றாய்ப் பசளைபல போட்டுக்;
கண்மணியை அன்றோ கதிராக்கப் போட்டுள்ளோம்!
தண்ணீர் இறைக்க இனித் தாமதித்து நிற்பதுவோ?
அண்ணை உடம்பிருக்க ஆரோ சிலதம்பிமார்
தண்ணீர் இறைச்சுநிதம் தாம் தனிய மாய்வதுவோ?

□ ★ □

பாழ்ங்கிணத்து நீரைப் பாரத கங்கையென,
ஈங்கெமக்குக் காட்டிவிட எடுத்த முயற்சியெலாம்,
வெம்பல் மாங்காயாய் வீழ்ந்ததையும் கண்டோமே!
காற்று வரும் புதிய கதவும் திறந்திருக்கு.
ஊற்றுவரும் வேளை ஓய்ந்து கிடப்பதுவோ?
சேற்றைக் கழுவிடலாம்; சிறுகளைப்பும் நீக்கிடலாம்!

□ ★ □

கண்ணின் மணிவிதைத்து, உழுது, மறுத்துழுது
எண்ணக் கிடங்காலே இரத்தமள்ளி நீரிறைத்து;
அண்ணைகை ஓயஆர்எவரோ பார்த்திருந்தும்;
விண்வரண்ட வேளையெலாம் விரக்திஅடையாமல்;
மண்ணைக் குளிர்வித்த மக்கள் பெயராலே,
புண்சுமந்த நெஞ்சோடும்; பண்ணிசையால்
உங்களிடை
அண்மித்து நின்றன்பாய் அழைப்பது கேட்கலையோ?
பிஞ்சுகளே இந்தப் பெரிய சுமைதாங்க,
நெஞ்சினிலே நெருப்புப் பொறிசுமந்து நிற்கின்றார்,
பிஞ்சுகளே இந்தப் பெரியபணி சுமக்க
அஞ்சாமல் நிற்க, அணிதிரண்டு முன் நிற்க;
நெஞ்சில் நெருப்பேந்தி நீர்வருதல் ஆகாதோ?

(வளரும்) - கல்வயல் வே. குமாரசாமி

## போட்டிகள் நிறுத்தம்

சாதாரண சூழ்நிலை காரணமாக யாழ் மாநகர சன சமூக நிலைய சமேளனம் கொய்யாத்தோட்ட சன சமூக நிலையம் ஆகியன நடாத்தி வந்த பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடாத்திவந்த அமரர் குமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

மீண்டும் போட்டிகள் ஆரம்பமாகும் பொழுது சம்பந்தப்பட்ட கழகங்களுக்கு தெரிவிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது (16)

## யூகோஸ்லேவிய எல்லையைக்கடக்கமுயன்ற

# 20 இலங்கையருக்குச் சூடு!

யூகோஸ்லேவியா எல்லையைக் கடக்க முற்பட்ட இருபது இலங்கையர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இச் சம்பவம் நடந்துள்ளது.

கொழும்பிலிருந்து சென்ற இந்த இலங்கையர்கள் பல்கேரியா, இத்தாலி செல்வதற்காக சட்டவிரோதமாக யூகோஸ்லேவியா எல்லையைக் கடக்க முயன்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வாழ்க்கைத் திற[ன்] மூலப்பொருள் நி[தி]

1991 ஆம் ஆண்டுக்கு[ரிய] வாழ்க்கைத் திறன் கல்[வி]க்கான மூலப் பொருள்களு[க்]கான நிதியை இதுவரை பெ[ற்]றுக்கொள்ளாத பாடசாலை[க]கள் உடனடியாக உரிய படி[]வங்களைப் பூரணப்படுத்தித் தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ் தொழில்நுட்பக் கல்வி அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கோரப்படாத நிதி வேறு பாடசாலைகளுக்கு மாற்றிக் கொடுக்கப்படும். (?2)

## றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள்

## விடுதியிலிருந்து கடத்தல்

தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த றுகுணு பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த ஐந்து மாணவர்கள் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக மாத்தறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெவி நுவரையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த இம் மாணவர்கள் அண்மையில் நள்ளிரவு 12 மணிக்கு வாகனம் ஒன்றில் வந்த இனந் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து மேற்படி பல்கலைக்கழக நிருவாகம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (38)

## சின்னராசாவுக்கு விசேட ஒளிபரப்பு

தவில்மேதை சின்னராசாவின் இசைத்துறை குறித்து ரூபவாஹினியில் நேற்று முன்தினம் விசேட நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது.

# போதைக்கு ஸ்பிரிட் அருந்திய

## 16 பேர்பலி; 30பேர் ஆபத்துநிலையில்

போதைக்கு வைன்ஸ்பிரிட் அருந்தினராம். விளைவு—16 பேர் பலியானார்கள்.

கேகாலை மாவட்டத்தில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வைன் ஸ்பிரிட் நச்சுத் தன்மையால் பாதிக்கப்பட்ட மேலும் 30 பேர் கேகாலை வைத்தியசாலையில் தற்பொழுது உயிருடன்போராடி வருகின்றனர்.

# கொழும்பு குண்டு வெடிப்பில்

## 35 ஆடம்பர வீடுகள் முற்றாகச்சேதம்

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பின்போது அப்பகுதியிலுள்ள சுமார் 35 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத் தற்பொழுது கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த வீடுகளில் அநேகமானவை பிரமாண்டமான ஆடம்பர வீடுகளாகும். அவை இராஜதந்திரிகளுக்கும் முக்கிய வர்த்தகப் புள்ளிகளுக்கும் சொந்தமானவையாகும்.

இந்த குண்டுவெடிப்பில் அப்பகுதியில் மேலும் 54 வீடுகள் ஓரளவு சேதமடைந்துள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

சேதமடைந்த வீடுகளைத் திருத்த குறைந்த வட்டியில் இரண்டரை லட்சம் ரூபாவுக்குக் குறையாத கடன் அரசால் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கு

## 1000 ரூபா முற்பணம்

பிறமாவட்டங்களில் இருந்து தற்காலிக இடமாற்றம் பெற்று வந்துள்ள ஆசிரியர்கள், ஊழியர்களுக்கு அவர்களுக்குரிய சம்பளத்தை வழங்க யாழ் கல்வித் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இடமாற்றம் பெற்று வந்துள்ள ஆசிரியர்கள், ஊழியர்களது சம்பள விவரம் கிடைக்காத போதும் அவர்களது இடமாற்றக் கடிதத்தை ஆதாரமாக வைத்து தற்காலிக சம்பளமாக 1000 ரூபா வழங்கப்படும் என்றும் பின்னர் அவர்களது சம்பள விவரம் குறிப்பிட்ட மாவட்ட கோட்டக்கல்வி அலுவலகத்திலிருந்து கிடைத்ததும். முழுச் சம்பளமும் வழங்கப்படும் எனவும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (78)

## 70 வீட்டுத் திட்டத்தில்

## 26 இன் அமைப்பு வேலைகள் பூர்த்தி

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் எழுபது வீட்டுத் திட்டத்தில் இதுவரை 26 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மிகுதி 44 வீடுகளையும் விரைவில் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கீரிமலை, வயாவிளான், தெல்லிப்பழைப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்காக இவ் வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது.

இவ் வீடுகளில் குடியமர்த்தப்படுபவர்களுக்குச் சமையல் உபகரணங்களும் வழங்கப்பட்டுவருகின்றன.

## வீடுகள் வாடகைக்குக்கொடுத்தோரும் பதிய வேண்டுமெனப் பணிப்பு

கொழும்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிராதோர் தம்மைப் பதிவு செய்வதற்கான காலக்கெடு இம் மாதம் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இத்தகையோர் பதிவதற்கு 18 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை கடந்த ஜனவரி முதலாம் திகதிக்குப்பின் கொழும்பில் வீடுகளை வாடகைக்குக் கொடுத்தோர், மற்றும் ஆட்களை வீடுகளில் தங்க வைத்திருப்போர் அனைவரும் அது பற்றிய விவரங்களைப் பொலிஸில் பதிய வேண்டுமெனவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

## அவர்கள் பார்வையில்....

## 'இதம் தரும் சூழல்' சுடலையாகிறது

தலைநகரிலும், தென்பகுதியின் ஏனைய நகரப் பகுதிகளிலும் தமிழ் எழுத்துக்கள் தற்பொழுது திட்டமிட்ட அடிப்படையில் கொலை செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் நுவரேலியாவில் காணப்பட்ட விளம்பர அறிவித்தல் ஒன்றில் 'சுகம் தரும் சூழல்' என்று எழுதுவதற்குப் பதிலாக ''சுகம் தறாம சுடல'' என்று எழுதப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

அரச கட்டிடங்கள், திணைக்களப் பெயர்ப் பலகைகளிலேயே இத்தவறுகள் காணப்பட்டுச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்த போதிலும் பயன்ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (38)

## தெல்லிப்பழை வைத்தியசாலையில்

## 3 டாக்டர்களே கடமையில்

மானிப்பாயில் இட்கிய வரும் தெல்லிப்பழைமாவடங் அரசாங்க வைத்தியசாலையில் டாக்டர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

ஏழு டாக்டர்கள் கடமையாற்ற வேண்டிய இவ் வைத்திய சாலையில் தற்போது மூன்று டாக்டர்களே கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ்வைத்திய சாலையில் முக்கிய மருந்து வகைகளுக்கும் பலத்ததட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (13)

## அன்புச் சின்னமாக

## ராஜீவின் கிழிந்த உடைகள்

ராஜீவ்காந்தி கொல்லப்பட்டபோது அவர் அணிந்திருந்த ஆடைகளை அவரது மனைவியிடம் ஒப்படைக்குமாறு ராஜீவ்கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட விசேட குழுவின் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைக்குத் தேவைப்படும்போது அவை மீண்டும் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்ற நிபந்தனையுடன் இவ் உடைகளை வழங்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

ராஜீவ் கொல்லப்பட்டபோது அணிந்திருந்த வெள்ளைநிற பிஜாமாவும், இரத்தக்கறை படர்ந்த துணியும் ஸோனியா காந்தியிடம் இந்த உத்தரவுக்கமைய ஒப்படைக்கப்படவுள்ளன.

## 190 பேர் விசாரணை; 12 பேர் கைது

## எனினும்முக்கியநபர்கள்சிக்கவில்லை

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இதுவரை 190 பேர் இரகசிய விசேட புலனாய்வுத்துறையினரால் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

அது தவிர இக்கொலை தொடர்பாக 12 பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

எனினும் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் முக்கிய சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

## இந்து - முஸ்லிம் கலவரம்;

## இதுவரை 2025பேர் மரணம்

இந்தியாவில் காஷ்மீர் மாநில நிலைமை மிக மோசமாக உள்ளதாகப் பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

★ 1989 க்குப் பின்னர் அங்கு இந்து முஸ்லிம் கலவரத்தினால் 2025 பேர் உயிரிழந்துள்ளனர்.

★ 1989க்குப் பின்னர் இவ்வாண்டு மே மாதம் வரை சீக்கிய, அஸாம் போராளிகளினால் 5000 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

★ பஞ்சாப்பில் கடந்த 20 நாட்களில் மட்டும் 60 சீக்கியப் போராளிகள் இந்திய இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இத் தகவல்களையும் உள்துறை அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

### ஒன்றுகூடல்

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் 33வது ஒன்றுகூடலும் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை நினைவு நாளும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் நடைபெறும்.

## கேகாலை வாக்காளர் பட்டியலில்

## தமிழ்ப்பெயர்களில் குளறுபடி

கேகாலை உதவித் தேர்தல் ஆணையாளர் காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட வாக்காளர் இடாப்பில் உள்ள தமிழ்ப்பெயர்களில் குளறுபடி காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் வெளியிடப்பட்ட தேர்தல் வாக்காளர் இடாப்பில் சின்னையா என்ற பெயர் சிற்றையா என்றும் செல்லையா என்ற பெயர் வெல்லையா என்றும் இருந்தன. இதனால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழர் தேர்தலில் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை இழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நாற்பது வருடங்களுக்குப்பின் கிடைத்த வாக்குரிமையை உரிய முறையில் பயன்படுத்தமுடியாமல்போனதாகத் மலையகத்தமிழ்மக்கள் கவலைதெரிவித்துள்ளனர். 38

## பொதுக்கூட்டம்

வடபிராந்திய வர்த்தக ஊழியர்சங்கத்தின்மாதாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு யாழ் கொட்டடிநமசிவாயவித்தியாலயத்தில்நடைபெறும். யாழ் மாநகரசபைக்குட்பட்ட சகல வர்த்தக ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

## ஆசிரியர்களுக்குப் புதிய சம்பளத்திட்டம்

## அக்டோபர் 6 முதல் நடைமுறைக்கு!

ஆசிரியர்களுக்கான புதியதோர் சம்பளத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஆசிரியர் தினமான அக்டோபர் மாதம் 6ஆம் திகதி முதல் இப் புதிய சம்பளத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதனால் ஒரு லட்சதது 80 ஆயிரம் ஆசிரியர்கள் நன்மை அடைவர் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## பெருஞ் சாந்தி

விடுதலைப்புலிகளின் போராட்டம் வெற்றிபெறவும், தமிழீழ மக்களின் சுபிட்சத்திற்காகவும், இறைவனின் திருவருள் வேண்டி இம்மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் வண்ணை சிவன் கோவிலில் பெருஞ்சாந்தி நடைபெற ஆலய பரிபாலன சபையினர் ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாக நிர்வாக சபை அறிவித்துள்ளது.

### இந்திய வானொலி செய்தியாளர் கருத்து

# ஸ்ரீலங்கா அரசின் முப்படைகளையும் எதிர்த்து தாமும் எதிர் இராணுவம் போன்றே புலிகள் மோதுகின்றனர்

தமது பதினாறு வருடகால ஆயுதப்போராட்டத்தில் இம்முறை விடுதலைப் புலிகள் வித்தியாசமான முறையில் அரச இராணுவத்தினருடன் மோதுகின்றனர்.

இவ்வாறு அகில இந்திய வானொலியின் கொழும்புச் செய்தியாளர் கருப்பசாமி ஆனையிறவு போர் குறித்த தமது விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடற்கரை வழியாக கரையிறங்கி ஆனையிறவு முகாமை நோக்கி முன்னேறமுயலும் அரச படைகளை புலிகளும் தாமும் ஒரு இராணுவம் போன்று எதிர்கொண்டு அகோரமாக மோதுகின்றனர் எனக்குறிப்பிடும் அச்செய்தியாளர் இப்போரில் ஸ்ரீலங்காம் படைகள் முப்படையினரையும் உபயோகிப்பதைச்சுட்டிக் காட்டுகிறார்.

### நவாலியில் பரா

## மாவீரரின் ஆயுதங்களை ஏந்த முன்வரவேண்டும்

''எதிரி முப்படைகளின் தாக்குதல்களுடன் யாழ் குடாவூடாக ஆனையிறவு முகாமைக் கைப்பற்ற பிரயத்தன முயற்சியை மேற்கொள்கிறான். இந்நிலையில் விடுதலைப் புலிகளின் வீரம் - தியாகம் செறிந்த போராட்டத்தால் படையினரை நிலைகுலையச் செய்கிறார்கள்'' இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பும் பொறுப்பாளர் பரா வீரமரணமடைந்த போராளிகளின் அஞ்சலிக் கூட்டத்தில் நேற்று உரையாற்றினார்.

கட்டைக்காடு மோதலில் வீரமரணமடைந்த ஐந்து போராளிகளின் புகழுடல்கள் மக்களின் இறுதி அஞ்சலிக்காக நவாலி சென் பீற்றர்ஸ் பாடசாலையில் நடைபெற்ற இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் தொடர்ந்து பரா உரையாற்றுகையில்;

''போராளியானவன் எதிரியுடனான மோதலில் எந்நேரமும் சாவு ஏற்படலாம் என்ற வீரத்துடன் போராடிக் களத்தில் மடிகிறான் எனவே இந்த போராளிகளின் ஆயுதங்களை ஏந்த மக்களாகிய நீங்கள் முன்வரவேண்டும்'' என்றார்.

இறுதிஅஞ்சலியைச்செலுத்த பெருந்திரளான மக்கள் வந்திருந்த இக் கூட்டத்தில் வலிகாமம் வட்டவைப் பொறுப்பாளர் சங்கர் தலைமையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் உரையாற்றினர்.

இதைத் தொடர்ந்து போராளிகளின் புகழுடல்களுக்கு பவனியாக வந்த வாகனத்திற்கு மக்கள் வீதியோரங்களில் நின்று பூக்கள்சொரிந்து இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

புகழுடல்கள் ஆனைக்கோட்டை வீதியூடாக கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாகின. (05)

## ஊரடங்குச் சட்டத்தை நீக்குமாறு

### ஐ. நா. பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை

வவுனியா பகுதியில் அமுலில் உள்ள ஊரடங்குச்சட்டத்தை நீக்குமாறு அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளது.

மடுவில் உள்ள அகதிகளுக்கு உணவுமற்றும்அத்தியாவசியப் பொருள்களை வவுனியா ஊடாக அனுப்ப முடியாதிருப்பதாகவும் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக வவுனியா ஊரடங்குச்சட்டத்தால் மடுவில் உள்ள அகதிகளுக்கான உணவுப்பொருள் மற்றும் மருந்து வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (74)

## வல்லிபுரம்கோவில்கோபுரம் குண்டுவீச்சில் தப்பியது!

வல்லிபுரக் கோவில் பகுதியில் நேற்றுக்காலை பொம்மர் தாக்குதல் நடைபெற்றது.

இராசகோபுரப்பகுதிக்கு அண்மையில் உள்ள தென்புற வீதியில் விழுந்து இக்குண்டு வெடித்தது ஆனால் இராசகோபுரம் உட்பட கோவிலுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

இன்று காலை 8. 45 மணியளவில் நடைபெற்ற இக்குண்டு வீச்சில் வல்லிபுரக் கோவில் மடத்தின் கூரைப் பகுதி சிறிதளவு சேதமடைந்துள்ளதுடன் பெரிய மரங்களும் முறிந்து விழுந்துள்ளன. (50, 43)

## ஆஸ்பத்திரி மூடப்பட்டது

வடமராட்சி கிழக்கில் வான் தாக்குதல்கள், கடற்படைத் தாக்குதல்கள் காரணமாகப் பாதுகாப்பு நலன் கருதி மருதங்கேணி வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இவ்வைத்தியசாலையின் ஒருபகுதி கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலினால் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (43 50)

## தூதுவர் ஜா- ஜனாதிபதி பேச்சுவார்த்தை

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். என். ஜாநேற்று ஜனாதிபதிபிரேமதாஸாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர்ஹேரல் ஹேரத்தின் புதுடில்லி விஜயம் தொடர்பாகவும், நவம்பரில் கொழும்பில் ஆரம்பமாகவுள்ள சார்க் மாநாடு ஏற்பாடு குறித்தும் இருவரும் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## அவசர தேவைக்கு மட்டும் பிறப்பு சான்றிதழ் வழங்கப்படும்

யாழ் செயலகத்திலுள்ள மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பிறப்பு அத்தாட்சிச் சான்றிதழ்களை அவசரதேவைகளுக்காக பெறுபவர்களுக்கு அவற்றை உடனடியாகவே வழங்குவதற்கு யாழ் அரச அதிபர் க. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அவசர தேவைகள் என்ன என்பதை நிருபித்தால் மட்டுமே உடன் பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும் எனச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 74, 10

## நெடுந்தீவுப் படகுச்சேவை ஆரம்பிக்க நடவடிக்கை

குறிகாட்டுவான் - நெடுந்தீவுப் படகுச் சேவையை விரைவில் நடாத்த யாழ் அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுபற்றி அரசாங்க அதிபர் நேற்று சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்கக் கிளை உறுப்பினர்கள் அரசாங்க அதிபரைச் சந்தித்து மகஜர்கள் வழங்கியதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (33)

### வெற்றிவேண்டி பொங்கல்

மறைந்த வீரவேங்கைகளின் ஆத்மசாந்திக்காகவும் ஆனையிறவு முகாமில் போராளிகளின் வெற்றிவேண்டியும் விசேட பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை மண்டைதீவு கண்டுப்புளியடி வீரபத்திரர் ஆலயத்தில் நடைபெறும். 19

### வெளியேறிய படைமீது முல்லைத்தீவில் தாக்குதல்

முல்லைத்தீவு முகாம் காவலரணில் இருந்து வெளியேறிய படையினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் நடாத்தி விரட்டினர்

நேற்றுக்காலை சிலாவத்தை பக்கமாக உள்ள காவலரணில் இருந்து படையினர் 100 யார் தூரத்திற்கு முன்னேறியதும் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

இதனால் படையினர் பின்வாங்கி காவலரணுக்குள் புகுந்தனர். 11

## இராணுவத் தொண்டர்க்கு ஓய்வூதியம் வழங்கப்படும்

ஸ்ரீ லங்கா இராணுவத் தொண்டர் படையினருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான சட்ட மூலத்தை நேற்று அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

22 வருட சேவையை ராணுவத்தொண்டர் படை சேவையில் பூர்த்தி செய்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாஸவினால் இத்திட்டம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஆனையிறவு...

விதமான கடும் மோதலும் முகாமில் இருந்து நடக்கவில்லை. 11

### தாளையடி...

இதேவேளை மருதங்கேணி வைத்தியசாலைப் பிரதேசத்தில் நேற்று பொம்மர் தாக்குதல்கள் நடைபெற்றன. இத்தாக்குதலிலும் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. (50 43)

### வடமராட்சி ..

தொடக்கத்தில் மருதங்கேணிப் பகுதியிலேயே தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வந்து பின்னர் அவை வடமராட்சி கிழக்கின் அனைத்துப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. 43, 50

### வெற்றிலைக்கேணி...

வித்தியாலய சுற்றாடலிலேயே தங்கியிருப்பதாக அங்கிருந்து 2 மைல் தொலைவிலுள்ள ஆழியவளைக்கு வீடு பார்க்கச் சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர். இப்பகுதியில் நடைபெறும் மோதல் குண்டுவீச்சு சத்தங்கள் 8 மைல் தொலைவிற்கு கேட்கின்றதாம். 11, 43, 50

### சென்னையில்...

சேர்க்கப்பட்டுள்ளார்.

குண்டினுள் இருந்து வெளியான இரும்புத் தூள்களினால் வளாகத்தின் மதில் சேதமடைந்தது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸ் மோப்ப நாய்கள், வெடிகுண்டு நிபுணர்கள் அப்பகுதிக்கு வந்தனர்.

குண்டு பிளாஸ்டிக் உறை ஒன்றினுள்இருந்ததாகவும் இச்சம்பவம் குறித்து இதுவரை எவரும் கைதாகவில்லை எனவும் தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### குடத்தனையில்...

காலை 9 மணியளவில் குடத்தனைச் சந்திக்கு அண்மையில் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி லோகநாதன்(25) என்னும் இளம் விவசாயியாவார். (43, 50)

### புலிகள்...

எனவும், முகாமைக்கைவிடும் எண்ணம் படையினரிடம் தற்போது இல்லை அங்கு மேலும் பலமுகாம்கள் அமைக்கப்படும் எனவும் சிறில் ரணதுங்க குறிப்பிட்டார். தாக்குதல்கள் எவ்வளவு காலம் நீடிக்கும் எனக்கூற அவர் மறுத்து விட்டாராம்.

### நேரசூசிகைக்கு ..

றதும் மாணவர்களை ஒருமித்து வீட்டிற்கு அனுப்பாது வகுப்பு ரீதியில் பகுதி பகுதியாக அனுப்ப வேண்டுமென வும் மறுஅறிவித்தல் வரை விளையாட்டுப் போட்டி, மாணவர் கல்விச் சுற்றுலா, பரிசளிப்பு விழா, கலை விழாக்கள் போன்றவை பிற்போடப்பட்டுள்ளன எனவும் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (05)

## தீவுப்பகுதியில் அஞ்சலி

ஆனையிறவு மோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட விடுதலைப் போராளிகளின் புகழுடல்களுக்கு நேற்றையதினம் தீவகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மண்கும்பானில் உள்ளவிடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் செயலகத்தில் வைக்கப்பட்டிருந்த கரம்பனைச் சேர்ந்த டயஸ் (யாஸ்ரின் றோய் பபியன்) நெடுந்தீவைச் சேர்ந்த கட்டப்பொம்மன் ஆகியோர் களினது புகழுடல்கள் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. 19

### மறுமலர்ச்சிக்கழக கூட்டம்

பல்கலைக் கழக மறுமலர்ச்சிக்கழக அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் இன்று மாலை 4. 00 மணிக்கு மறுமலர்ச்சிக்கழகத்தில் நடைபெற விருப்பதால் கழக அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பிற்போடப்பட்டது

யாழ் மாவட்டத்தில் வட்டவை ரீதியாக நடைபெறவிருந்த தியாகி திலீபனின் ஞாபகார்த்த தட - கள விளையாட்டுப் போட்டிகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன. 05

### கப்பல் வர அனுமதியில்லை

ஊரடங்குச்சட்டம்விலக்கப்பட்டபின்னரே பருத்தித்துறைக்கு உணவுக் கப்பல்கள் அனுப்பிவைக்கப்படும் என கொழும்பு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 74

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 19.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.